# 19 விடுதலையும் மீட்பும்

**விடுதலையை நோக்கி-**

- இறைவனின் வாக்கின்படி நியமித்த நாட்டிற்கு ஆபிரகாம் சென்றமை மக்களின் விடுதலைக்காகச் சென்ற யாத்திரையாகும்.
- எகிப்து நாட்டில் இஸ்ரயேல் மக்கள் அடிமைத்தனத்திலிருந்து மீட்பு கிடைப்பதற்காக மோசே ஆரோனுடன் சென்ற யாத்திரை, விடுதலைக்காகவே ஆகும். (விடுதலைப் பயணம் 3 : 7 -22)
- பேரரசுகளின் அடிமைத்தனத்திலிருந்த பபிலோனியாவில் சிதறுண்ட மக்களுக்கு கடவுள் அவர்களோடிருந்து முழு விடுதலையைப் பெற்றுக் கொடுத்தார்.

**வாசிப்போம்**
**எசாயா 9 : 1-2**

*ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார். ஓர் ஆண்மகவு தரப்பட்டுள்ளார். ஆட்சிப் பொறுப்பு அவர் தோள் மேல் இருக்கும். அவர் திருப்பெயரோ வியத்தகு ஆலோசகர், வலிமை மிகு இறைவன் என்றுமுள்ள தந்தை அமைதியின் அரசர் என்று அழைக்கப்படுவார். எசாயா 9 : 6*

## விடுதலை

சமாதானம், சுபீட்சம் என்பவற்றை நிலைநாட்ட கடவுள் விடுதலையைப் பெற்றுக் கொடுத்தார் என பழைய ஏற்பாடு கூறுகிறது.



## இயேசுவின் மீட்புப் பணி

தீமையில் மூழ்கி வாழ்பவருக்கு ஆண்டவர் இயேசு ஒருவரால்தான் மீட்பு கொடுக்க முடியும் என புதிய ஏற்பாடு கூறுகிறது. அத்துடன் இயேசு நோயாளர்களைக் குணமாக்கினார். மக்களுக்கு உதவி செய்தார். நற்போதனைகள் அளித்தார். அதன் மூலமாக முழுமையான விடுதலையைக் கொடுத்தார்.

*ஆண்டவருடைய ஆவி என் மேல் உள்ளது ஏனெனில் அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர். பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்.*

*லூக்கா 4 : 18, 19*

**இயேசு கிறிஸ்து உலகிற்கு வந்ததன் நோக்கம் எல்லா மக்களுக்கும் முழுமையான விடுதலையைக் கொடுப்பதற்காகும்.**

**வாசிப்போம்**
***ஏசாயா 61 : 1, 2***

விடுதலை முழுமையான வாழ்க்கையாகும். நித்தியவாழ்வு உறுதியானதாகும். எமது வாழ்வை நிறைவு செய்ய இறைவனால் மட்டுமே முடியும். கடவுள் அளிக்கின்ற விடுதலையை கிறிஸ்தவர்களாகிய நாம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

## மார்டின் லூதர் கிங்



நிற அடிப்படையில் அல்லாது குண அடிப்படையில் நியாயம் வழங்கப்படல் வேண்டும் என்பதுதான் மார்டின் லூதர் கிங்கின் கனவு.

அமெரிக்காவில் நிற வித்தியாசம் காரணமாக ஐயாயிரம் பேர்களுடன் ‘பஸ் பயண எதிர்ப்பு கூட்டம்’ ஒன்றை ‘மொண்ட்கொமரி’ என்ற இடத்தில் நடத்தினார். அகிம்சை முறையிலான அரச சட்ட மீறுதல் கூட்டங்களுக்கு தலைமை தாங்கியமையால் தண்டனைக்கு ஆளாகினார். 1963இல் அலபாமா என்ற இடத்தில் காவல் துறையினரால் தடி அடி பட்டார், மேலும் பலர் இவருக்குக் கைகொடுத்தனர். இயேசு கிறிஸ்துவின் கொள்கைகளைப் பின்பற்றினார். மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இன வேறுபாட்டிற்கான நியாயமான சட்டங்கள் உருவாக்கப்பட்டன. 1964 இல் சமாதானத்திற்கான நோபல் பரிசு கிடைத்தது. கறுப்பு இன மக்கள் விடுதலை பெற்றனர்.

**இவர் யார்? கண்டுபிடியுங்கள்**

*புன்முறுவல், இதய தாக்கத்தின் ஏக்கக் கோடுகள் நிறைந்த முகம், பிறர் துயரம் கேட்டால் மெழுகுவர்த்தியாய் உருகும் உள்ளம்.*

**?**

**வாசியுங்கள்**
**லூக்கா**
***5 : 31***

**நோயற்றவர்க்கு அல்ல; நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை** என்ற இயேசுவின் கோட்பாட்டின் படி தனது சேவையை ஆரம்பித்தார் அன்னை திரேசா. இனம், மதம், மொழிக்கு அப்பால் இவரின் பணி அமைந்தது.



ஒருமுறை தொழுநோயாளர்களுக்கு இருப்பிடம் அமைப்பதற்காக டெல்லி அரச அதிபரிடம் 10 ஏக்கர் காணிகேட்டார். இடம் கிடைத்தவுடன் தனக்கு அளிக்கப்பட்ட தேனீரையும் அருந்தாது வெற்றிக் களிப்புடன் திரும்பி தன் பணியினை மேற்கொண்டார்.

ஒரு நாள் வீதியில் செல்லும்போது குளிரால் நடுங்கிக் கொண்டிருந்த 4 பேரைக் கண்டார். இயேசு கூறிய நல்ல சமாரியன் உவமையில் வரும் மூன்றாவது நபராக அவர்களைத் தன் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார். மிகவும் மோசமான நிலையிலிருந்த பெண்ணை நேரடியாக தாமே கவனித்துக் கொண்டார்.

அன்னையின் வார்த்தையின்படி;
'அடுத்த சில நாட்களில்,
முகம் ஒளி வீச புன்சிரிப்புடன் என் கையை இறுகப் பற்றிக் கொண்டு உங்களுக்கு நன்றி எனக் கூறிய அப்பெண் இறையடி சேர்ந்தாள். நன்றிப் பெருக்கால் அன்பை அள்ளி ஊற்றி புன் முறுவலுடன் பிரிந்தாள்'. *(அன்னை அவர்கள் நோபல் பரிசு பெற்றபோது இதனைக் கூறினார்)*

**செயற்பாடு**

*இயேசு தரும் முழுமையான மீட்பில் உள்ளடங்கும் வெவ்வேறு பகுதிகள் யாவை? அவரின் வாழ்விலிருந்து ஒவ்வொரு உதாரணம் தருக.*



இலவச விநியோகத்திற்காக